Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
E-Mail: collegehouse_mdu@yahoo.co.in
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 253 | உள்ளூர் - 10.09.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 253 | வெளியூர் - 11.09.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**விநாயகர் சதுர்த்தி ராசி பலன்கள்!**

**மத்திய அரசு 2,536 காலிப்பணியிடங்கள்! -10/+2**

**இடைத்தேர்தல்: தவெக வேட்பாளர்கள்?**

**செப். 16-ல் காலாண்டுத் தேர்வு!**

## அமெரிக்க மிட்-டெர்ம் தேர்தல்: வெற்றி பெற்றால் ரூ.5 லட்சம்!

வாஷிங்டன். செப். 10–

அமெரிக்காவில் மிட்–டெர்ம் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அதிபர் டொனால்ட் டிரம்ப் புதிய அறி விப்பை வெளியிட்டுள்ளார். நவம்பர் தேர்தலில் குடியரசுக் கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைத் தக்க வைத்தால், ஒவ்வொரு அமெரிக்க குடிமகனுக்கும் 5,000 டாலர் (சுமார் ரூ.4.75 லட்சம்) வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.



'Trump Dividend' என அழைக்கப்படும் இந்தத் தொகையை அமெரிக்காவுக்குள் மட்டுமே பயன்படுத்தும் வகையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், இதற்கான நிதி ஆதாரம் குறித்து தெளிவான விளக்கம் இல்லை. ஏற்கனவே அமெரிக்க அரசின் கடன் 40 டிரில்லியன் டாலரை கடந்துள்ள நிலையில், இந்தத் திட்டம் சாத்தியமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தியாவில் தேர்தல் காலங்களில் நேரடி பணப்பலன் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைப் போல, டிரம்பும் இதே அணுகுமுறையைப் பயன்படுத்துவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## பிரிக்ஸ் மாநாட்டுக்கு இடையே பிரதமர் மோடி - சீன அதிபர் சந்திப்பு?

புதுடெல்லி, செப்.10–

டெல்லியில் நடைபெற உள்ள பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் நேரில் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 2020–ம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா – சீனா ராணுவத்தினருக்கு இடையே ஏற்பட்ட மோதலுக்கு பிறகு இரு நாடுகளின் உறவில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையே நேரடி சந்திப்புகள் குறைந்தன. இந்த நிலையில், டெல்லியில் வருகிற 12, 13–ந்தேதிகளில் நடைபெற உள்ள பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜி ஜின்பிங் இந்தியா வருகிறார். 7 ஆண்டுகளுக்கு பிறகு அவர் இந்தியாவுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. மாநாட்டின் போது பிரதமர் மோடியும், ஜின்பிங்கும் தனியாக சந்தித்து பேசுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சந்திப்பு நடந்தால்,



2020–ம் ஆண்டு கல்வான் மோதலுக்கு பிறகு இந்தியாவில் இரு தலைவர்களும் நடத்தும் முதல் இருதரப்பு சந்திப்பாக அது அமையும்.

மோடி– ஜின்பிங் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை பிரச்சினை, அசல் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் நிலவும் நிலவரம், வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கல்வான் மோதலுக்கு பிறகு இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட பதற்றத்தை படிப்படியாக தணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லையில் ராணுவ பதற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக இரு தலைவர்களின் நேரடி சந்திப்பு இந்தியா–சீனா உறவில் முக்கிய திருப்பமாக அமையலாம் என்று கருதப்படுகிறது.

சீன அதிபர் ஜி ஜின்பிங் கடைசியாக 2019–ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்திருந்தார். அதன்பிறகு 2020–ம் ஆண்டு கல்வான் மோதல் ஏற்பட்டதால் இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இரு நாடுகளும் உறவை சீரமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த ஆண்டு பிரதமர் மோடி சீனா சென்றிருந்த நிலையில், தற்போது ஜின்பிங் இந்தியா வருவது முக்கியத்துவம் பெற்றுள்ளது. மோடி–ஜி ஜின்பிங் சந்திப்பு நடைபெறுவது உறுதியானால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான முக்கிய பேச்சுவார்த்தையாக இது அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2026 பிரிக்ஸ் மாநாடு!

# உலக நாடுகளின் பார்வை இந்தியா மீது...

## செப். 12, 13–ல் 25 நகரங்களில் 350 கூட்டங்கள்!

வாஷிங்டன், செப். 10–

இந்தியாவின் தலைமையில் நடைபெறும் 18–வது பிரிக்ஸ் உச்சிமாநாடு செப்டம்பர் 12, 13–ம் தேதிகளில் புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறுகிறது. விரிவடைந்த பிரிக்ஸ் அமைப்பின் 11 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மற்றும் உயர்மட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்க உள்ளனர்.



இந்த மாநாட்டில் உலகளாவிய நிர்வாகம், சர்வதேச வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. மேலும், உலகளாவிய மற்றும் பிராந்திய மோதல்கள் குறித்தும் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர்.

'வலிமை, புதுமை, ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்காகக் கட்டியெழுப்புதல்' என்ற கருப்பொருளின் கீழ் இந்தியாவின் தலைமை முன்னெடுக்கப்படுகிறது. வர்த்தகம், டிஜிட்டல் தொழில்நுட்பம், சுகாதாரம், எரிசக்தி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் நடைமுறை ஒத்துழைப்பை அதிகரிப்பது இந்தியாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது.

பிரிக்ஸ் அமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், இந்தோனேசியா, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடம்பெற்றுள்ளன. உலக தெற்கின் குரலை வலுப்படுத்தும் முக்கிய சர்வதேச தளமாக பிரிக்ஸ் மாறி வருகிறது.

இந்த மாநாடு இந்தியாவுக்கு சீனா, ரஷ்யா உள்ளிட்ட முக்கிய நாடுகளுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தவும், வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கவும், உலக அரங்கில் இந்தியாவின் செல்வாக்கை வலுப்படுத்தவும் முக்கிய வாய்ப்பாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் வருகை, இந்தியாசீனா உறவுகளில் முன்னேற்றத்துக்கான வாய்ப்பாகவும் கவனிக்கப்படுகிறது.

மாநாட்டின் நிறைவில் 'புதுடெல்லி பிரகடனம்' வெளியிடப்பட உள்ளது.

## முதல்வர் விஜய் லண்டன் பயணம்!

சென்னை, செப். 10–

தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் அரசு முறைப் பயணமாக வியாழக்கிழமை (செப்.10) இரவு லண்டன் புறப்பட்டுச் செல்கிறார். முதல்வராகப் பதவியேற்ற பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். இந்தப் பயணத்தில் முதலீட்டாளர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தும் முதல்வர், தமிழகத்தில் முதலீடு செய்ய அவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார்.

சென்னை விமான நிலையத்திலிருந்து இரவு 10 மணியளவில் பயணிகள் விமானத்தில் துபாய் செல்லும் முதல்வர் விஜய், அங்கிருந்து வேறு விமானத்தில் வெள்ளிக்கிழமை (செப்.11) லண்டன் சென்றடைகிறார். லண்டனில்



நடைபெறும் முதலீட்டாளர்கள் சந்திப்பில் முதல்வர் விஜய் பங்கேற்று பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். அப்போது, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார்.

லண்டன் பயணத்தை முடித்துக் கொண்டு செப். 16–ஆம் தேதி இரவு புறப்பட்டு, துபாய் வழியாக சென்னைக்கு செப்.17–ஆம் தேதி முதல்வர் வந்தடைகிறார்.

தமிழகத்தை 2036–ஆம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்துவதே இலக்கு என தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

மேலும், தவெக அரசு பொறுப்பேற்ற முதல் 100 நாள்களில் வெற்றி முதலீட்டு மாநாட்டை நடத்தி, 104 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு ரூ.1,02,514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 1,21,788 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இடைத்தேர்தல்: தவெக வேட்பாளர்கள்?

சென்னை, செப். 10–

இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு ள்ளனர். அதன்படி மதுராந்தகத்தில் மரகதம் குமாரவேலும், தாராபுரத்தில் சத்தியபாமாவும் போட்டியிடுகின்றனர்.

இவர்கள் இருவரும் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று,





பின்னர் ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. வேட்பாளர்களாக மதுராந்தகம் தொகுதியில் முன்னாள் எம்.எல்.ஏ. கணிகா சம்பத்தும், தாராபுரம் தொகுதியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவகாமி வின்சென்டின் மகள் வக்கீல் உமா சங்கரியும் களம் இறக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

## தங்கம் விலை உயர்வு!

சென்னை, செப். 10–

தங்கம் விலை உயர்ந்துள்ளது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை (செப். 10) கிராமுக்கு ரூ. 110 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 14,255–க்கும் சவரனுக்கு ரூ. 880 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,14,040–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ. 255 –க்கும் ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2,55,000–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



## தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மாநில அரசியல் கட்சியான தவெக: உறுதி செய்த தேர்தல் ஆணையம்!



சென்னை, செப். 10–

தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மாநில அரசியல் தவெக கட்சியாக தேர்தல் ஆணையம் உறுதி செய்தது . தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 6–ல் இருந்து 7 ஆக உயர்ந்துள்ளது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 35.02% வாக்குகளை தவெக பெற்றது. தமிழக வெற்றிக் கழகத்திற்கு விசில் சின்னத்தை தேர்தல் ஆணையம் உறுதி செய்தது.

## மடப்புரம் காவலாளி அஜித் குமார் கொலை வழக்கில் டிஎஸ்பி உள்ளிட்டோர் மீது குற்றச்சாட்டு பதிவு!



மதுரை, செப். 10–

மடப்புரம் காவலாளி அஜித் குமார் கொலை வழக்கில் டிஎஸ்பி உள்ளிட்டோர் மீது குற்றச்சாட்டு பதியப்பட்டது. மானாமதுரை டிஎஸ்பி சண்முகசுந்தரம், திருப்புவனம் காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார் மீது கொலை வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. சார்பு ஆய்வாளர் சிவக்குமார், தலைமை 7 காவலர் இளையராஜா மீதும் கொலை வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. சிபிஐ தாக்கல் செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதியப்பட்டது.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளிடமிருந்து அவர்கள் இருப்பிடத்திற்கு சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

### பேரறிஞர் அண்ணா 118-வது பிறந்தநாள்:

## மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை..!



சென்னை, செப். 10–

பேரறிஞர் அண்ணா 118–வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளதாக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;–

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் 118வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2026 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக முன்னாள் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 10.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 24-ம் தேதி

## கடன் சுமையில் தமிழ்நாடு...
## ரூ.1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம் அவசியமா?



தமிழகத்தில் ஆட்சி நிர்வாகத்தை நவீனப்படுத்தும் நோக்கில், ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டசபை வளாகம் அமைக்க முதல்வர் சி. ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுமார் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில், ஒருங்கிணைந்த புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டசபை வளாகம் அமைக்கப்படும் என்று சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார். புதிய வளாகத்தில் அரசு துறைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைப்பதுடன், நவீன நிர்வாக வசதிகள், தீயணைப்பு பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், பசுமைக் கட்டிட தரநிலைகள், வாகன நிறுத்துமிடம், மாநாட்டு அரங்குகள் மற்றும் பொதுமக்களுக்கான சேவை மையங்கள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலகம் செயல்பட்டு வரும் புனித ஜார்ஜ் கோட்டை தொடர்ந்து வரலாற்று மற்றும் பாரம்பரியச் சின்னமாக பாதுகாக்கப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

சுமார் 400 ஆண்டுகளாக தமிழகத்தின் நிர்வாக மையமாக விளங்கும் புனித ஜார்ஜ் கோட்டை வளாகம் 107 ஏக்கர் பரப்பளவு கொண்டதாக இருந்தாலும், தலைமைச் செயலக பயன்பாட்டுக்காக தமிழக அரசின் கட்டுப்பாட்டில் சுமார் 4 ஏக்கர் மட்டுமே உள்ளது. மீதமுள்ள பகுதிகள் பாதுகாப்புத்துறை மற்றும் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், தற்போதைய இடத்தில் நிர்வாக கட்டமைப்பை விரிவுபடுத்துவதில் சிக்கல் இருப்பதாக அரசு கூறுகிறது.

**புதிய இடம் எங்கே?**

இதற்கிடையில், புதிய தலைமைச் செயலகம் அமைக்க சென்னை பட்டினப்பாக்கத்தில் சுமார் 26.36 ஏக்கர் அரசு நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த இடத்தில் சுமார் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் 15 மாடி ஒருங்கிணைந்த வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.1,200 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய தலைமைச் செயலகம் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து அதிகரிக்கும் என்பதால், லைட்ஹவுஸ் முதல் திரு.வி.க. பாலம் வரை சுமார் 3.5 கி.மீ. நீள உயர்மட்ட சாலை அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. இதனால், புதிய தலைமைச் செயலகத்திற்கான ரூ.1,200 கோடி செலவு மட்டுமின்றி, அதனைச் சுற்றியுள்ள சாலை மற்றும் உள்கட்டமைப்பு பணிகளுக்கான கூடுதல் செலவுகளும் எதிர்காலத்தில் ஏற்படுமா என்ற கேள்வி எழுகிறது.

**தமிழகத்தின் நிதிநிலை என்ன?**

இதுதான் தற்போது முக்கியமான விவாதமாக மாறியுள்ளது.

2026–27 நிதியாண்டில் தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.1,21,819 கோடியாக இருக்கும் என பட்ஜெட் மதிப்பீடு தெரிவிக்கிறது. இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதமாகும்.

அதேபோல், வருவாய் பற்றாக்குறை ரூ.55,775 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2026–27 நிதியாண்டில் தமிழக அரசு மேற்கொள்ளும் மொத்த கடன் பெறுதல் ரூ.1,73,445 கோடி என பட்ஜெட் கணக்குகள் காட்டுகின்றன. அதே காலகட்டத்தில் ரூ.51,971 கோடி கடன் திருப்பிச் செலுத்தப்பட உள்ளது.

மாநிலத்தின் நிலுவைப் பொறுப்புகள் 2026–27 நிதியாண்டின் முடிவில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 27 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மாநில அரசின் மின்துறை பொதுத்துறை நிறுவனங்களின் நிலுவைக் கடன் மட்டும் 2026 மார்ச் 31 நிலவரப்படி ரூ.2.47 லட்சம் கோடியாக இருந்ததாக PRS ஆய்வு குறிப்பிடுகிறது.

**ரூ.1,200 கோடி செலவு சரியா?**

புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கான அரசின் காரணங்களை முற்றிலும் நிராகரிக்க முடியாது.

அரசு துறைகளின் எண்ணிக்கை, ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நிர்வாகப் பொறுப்புகள் கடந்த பல ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. தற்போதைய கட்டிடங்களில் இடவசதி மற்றும் நவீன வசதிகளுக்கான கட்டுப்பாடுகள் இருப்பதாக அரசு தெரிவிக்கிறது.

எனவே, எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த நிர்வாக வளாகம் அமைப்பது ஒரு நீண்டகால முதலீடாக பார்க்கப்படலாம்.

ஆனால்... "கடன் சுமையில் இருக்கும் தமிழகத்திற்கு இப்போது ரூ.1,200 கோடி மதிப்பிலான புதிய தலைமைச் செயலகம் அவசியம்தானா?"

என்ற கேள்விக்கும் அரசு தெளிவான பதிலை வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், கட்டுமானச் செலவு மட்டும் ரூ.1,200 கோடியாக இருக்காது. புதிய வளாகத்திற்கான உள்கட்டமைப்பு, சாலை வசதிகள், பாதுகாப்பு, போக்குவரத்து மாற்றங்கள், பராமரிப்பு, மின்சாரம் மற்றும் பிற நிர்வாகச் செலவுகளும் தொடர்ந்து ஏற்படும்.

**மக்களின் பணம்... முன்னுரிமை எது?**

தமிழகத்தில் கல்வி, சுகாதாரம், குடிநீர், சாலைகள், நகர்ப்புற உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இன்னும் கூடுதல் முதலீடு தேவைப்படுகிறது.

இந்த நிலையில், ரூ.1,200 கோடி புதிய கட்டிடத்திற்கு செலவிடப்பட வேண்டுமா அல்லது அந்த தொகையை மக்கள் நேரடியாக பயன்பெறும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செலவிட வேண்டுமா? என்ற விவாதம் இயல்பாகவே எழுகிறது.

அதேநேரத்தில், ஒரு அரசு அலுவலக வளாகம் என்பது வெறும் கட்டிடம் மட்டுமல்ல. பல தசாப்தங்களுக்கு பயன்படுத்தப்படும் நிர்வாகச் சொத்து. எனவே, திட்டம் உண்மையில் நிர்வாகச் செலவைக் குறைத்து, துறைகளின் ஒருங்கிணைப்பை அதிகரித்து, மக்களுக்கு விரைவான சேவையை வழங்கும் வகையில் இருந்தால், அதன் நீண்டகால பலனையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**முழு கணக்கு வெளியிடப்படுமா?**

புதிய தலைமைச் செயலகத் திட்டத்தை அரசு முன்னெடுக்க முடிவு செய்தால், முழுமையான திட்ட மதிப்பீடு, நிதி ஆதாரம், கட்டுமான காலக்கெடு, பராமரிப்பு செலவு, சாலை மற்றும் போக்குவரத்து திட்டங்களுக்கான செலவு ஆகியவற்றை வெளிப்படையாக வெளியிடுவது அவசியமாகிறது.

குறிப்பாக, இந்தத் திட்டத்திற்காக புதிய கடன் பெறப்படுமா அல்லது ஏற்கனவே உள்ள அரசு நிதியில் இருந்து செலவு செய்யப்படுமா என்பதும் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தமிழகத்தின் நிதிநிலை முற்றிலும் மோசமான நிலையில் உள்ளது என்று கூறுவதும் சரியல்ல. 2026–27ல் நிதிப் பற்றாக்குறையை 3 சதவீதமாக வைத்திருக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது; நிலுவைப் பொறுப்புகளும் GSDP–யில் 27 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால் அதே நேரத்தில், வருவாய் பற்றாக்குறை, கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் அதிகரித்து வரும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பெரிய புதிய திட்டங்களை மிகுந்த நிதி ஒழுங்குடன் செயல்படுத்த வேண்டிய கட்டாயமும் அரசுக்கு உள்ளது.

**இறுதியில்...**

நவீன தலைமைச் செயலகம் தேவையா? — தேவை இருக்கலாம்.

ரூ.1,200 கோடி செலவு நியாயமானதா? — முழுமையான கணக்கு வெளியான பிறகே மதிப்பிட முடியும்.

கடன் சுமை உள்ள நிலையில் முன்னுரிமை எது? — இதுதான் மக்களிடையே எழும் முக்கியமான கேள்வி.

புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாற்றைப் பாதுகாப்பதும், நவீன நிர்வாகத்திற்கான புதிய கட்டமைப்பை உருவாக்குவதும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல.

ஆனால் மக்களின் வரிப்பணம் ஒவ்வொரு ரூபாயும் மிகுந்த பொறுப்புடன் செலவிடப்படுகிறதா என்பதுதான் இந்த ரூ.1,200 கோடி திட்டத்தின் உண்மையான சோதனை.

# மேற்கு வங்கத்தில் இடைத்தேர்தல்: மம்தா பானர்ஜி போட்டியா?



கொல்கத்தா, செப். 10–

மேற்குவங்கத்தில் 2 சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகிற அக்டோபர் 6–ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் முதல்–மந்திரியுமான மம்தா பானர்ஜி அதில் போட்டியிடுவாரா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள ரெஜினகர் மற்றும் நந்திகிராம் ஆகிய 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. ரெஜினகர் தொகுதியில் வென்ற ஹுமாயூன் கபீர் எம்.எல்.ஏ பதவி விலகியதை தொடர்ந்து காலியானது. நந்திகிராம் தொகுதியை முதல்–மந்திரி சுவேந்து அதிகாரி ராஜினாமா செய்தார். இதையடுத்து அங்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலில் நந்திகிராம் தொகுதியில் சுவேந்து அதிகாரியிடம் மம்தா பானர்ஜி தோல்வி அடைந்தார். சுவேந்து அதிகாரி 9,665 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தற்போது இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு இருப்பதால், மீண்டும் நந்திகிராமில் மம்தா போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. மேற்குவங்கத்தில் பாரதீய ஜனதா கட்சியின் வளர்ச்சி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள உட்கட்சி பூசல்கள் காரணமாக, கட்சியின் தலைவரான மம்தா பானர்ஜி நேரடியாக களத்தில் இறங்க வேண்டும் என்று அக்கட்சியினர் விரும்புகிறார்கள். எம்.எல்.ஏவாக மம்தா பானர்ஜி இருந்தால், எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டு மக்கள் பிரச்சினைகளை சட்டசபையில் வலுவாக எழுப்ப முடியும் என்றும், தனது கட்சியை பாதுகாக்க அது உதவும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இதில் நந்திகிராம் தொகுதியே மம்தாவுக்கு சாதகமானதாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. அதேவேளையில், ரெஜினகர் தொகுதியில் சுமார் 65 சதவீதம் முஸ்லிம் வாக்காளர்கள் இருப்பதால், அந்த தொகுதியும் மம்தாவுக்கு சாதகமாக அமையக்கூடும் என கூறப்படுகிறது. இதற்கிடையே, இந்த 2 தொகுதிகளிலும் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது திரிணாமுல் காங்கிரசுக்கு சாதகமாக இருக்கும் என்று அக்கட்சியின் சில தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனால் அவர் போட்டியிடுவாரா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# 'போலி பிம்பம்' உடைந்ததில் பதற்றம் பற்றிக்கொண்டதோ? - மு.க.ஸ்டாலினுக்கு தவெக கேள்வி!



சென்னை, செப். 10–

மிசா காலத்தில் நடந்ததை குறிப்பிட்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வீடியோ ஒன்றை இன்று காலை வெளியிட்டார். இந்த நிலையில், அவரது வீடியோவிற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தவெக ஐடி விங் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;–

பல ஆண்டுகளாகக் கட்டமைக்கப்பட்ட "சிறை சென்ற தியாகி" என்ற போலி பிம்பம் உடைந்ததில் பதற்றம் பற்றிக்கொண்டதோ?

எதை உலகறியக் கூடாது என்று மஞ்சள் துண்டு தந்தை முதல் ஆபாசநதி மகன் வரை கட்டி அடைகாத்தார்களோ, அது அம்பலமானதில் அச்சம் அதிகமாகியிருக்கிறது. அத்தனை நீளமாகப் பேசியும் detention copy பற்றி மட்டும் மூச்சுவிடவில்லை.

உண்மைக்கு விளம்பரங்களோ, விளக்கங்களோ தேவையில்லை. ஆனால் இங்கே shooting video வெளியாகிறது என்றால், போலி பிம்பம் உடைந்தது உண்மையாகிறது. பல cut–கள், உணர்வற்ற பேச்சு, மீண்டும் உண்மைக்கு மாறான ஒன்றை நம்ப வைக்க முயலும் படுதோல்வி முயற்சியாகவே தெரிகின்றன. கட்டுமரக் கதைகளாலும் கட்டுக்கதைகளாலும் கட்டமைக்கப்பட்ட பொய்ப் பிம்பம், மெய்யைத் தாக்குப்பிடிக்காது என்பதை நிரூபித்திருக்கிறது இன்று வெளியான பொய் போராளியின் காணொளி.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைத்தேர்தலில் மதிமுக போட்டியிடவில்லை - துரை வைகோ பேட்டி!



சென்னை, செப். 10–

தமிழகத்தில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் (அக்டோபர்) 6–ந் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியுள்ளது.

இன்று முதல் வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளதால் இடைத்தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது. இந்தநிலையில், சென்னை பனையூரில் தந்தி டிவிக்கு எம்.பி துரை வைகோ பிரத்யேக பேட்டியில் கூறியதாவது:–

மதுராந்தகம், தாராபுரம் இரு தொகுதிகளிலும் மதிமுக கடந்த தேர்தலில் போட்டியிடவில்லை. எனவே இந்த இடைத்தேர்தலில் தவெக வேட்பாளர்கள் தான் போட்டியிட வாய்ப்புள்ளதாக நினைக்கின்றேன். ஆனால் மதிமுக கண்டிப்பாக இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை.

வருகின்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் யார் வேட்பாளராக நிறுத்தப்பட்டாலும் அவரது வெற்றிக்கு மதிமுக உறுதுணையாக இருக்கும் என வைகோ அவர்கள் கூட்டத்தில் பேசியுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த கூட்டணிக்குள் வந்து இருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன். இடதுசாரி கட்சிகள் அவர்களது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். இந்த ஆட்சி தொடரவேண்டும் என அவர்களது ஆதரவை தொடர்ந்து தருகின்றனர். நிச்சயமாக இந்த கூட்டணியில் இடதுசாரி கட்சிகள் இடம்பெறும் என நான் நம்புகிறேன் என்றார்.

# நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பணிகளுக்கும் டி.என்.பி.எஸ்.சி. மூலம் ஆட்கள் தேர்வு?




சென்னை, செப். 10–

தமிழக சட்டசபையில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயல்பணிகள்) சட்டத் திருத்த மசோதாவை தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–மிகவும் திறமையான தொழில்முறை சார்ந்த மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு செயல்முறையை உறுதி செய்வதற்காக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ள பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிப்பதற்கான ஆள்சேர்ப்பு முறையை சீராக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் மாநிலத்தின் தொலைதூரப் பகுதியில் உள்ள இளைஞர்களும் இதுபோன்ற பணியிடங்களில் வேலைவாய்ப்பை பெற வாய்ப்பு ஏற்படும். எனவே தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயல்பணிகள்) சட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தும் வகையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ள பதவிகளுக்கு தகுதியான ஆட்களை தேர்வு செய்யும் பணியை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடம் (டி.என்.பி.எஸ்.சி.) கூடுதல் பணியாக ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக இந்த சட்ட திருத்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு கார்கள் வேண்டாம்: சட்டசபை செயலகத்திற்கு திமுக கடிதம்!




சென்னை, செப். 10–


தமிழகத்தில் பல எம்.எல்.ஏ.க்களுக்கு கார், உதவியாளர் உள்ளிட்ட வசதிகள் இல்லை என்று சட்டசபையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ. ஜோதிமணி பேசினார். அதைத்தொடர்ந்து, அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் அரசு சார்பில் கார்கள் வழங்கப்படும் என்று அவையில் முதல்–அமைச்சர் விஜய் அறிவித்தார்.

ஆனால் அரசு ஏற்கனவே நிதிநிலை நெருக்கடியில் இருப்பதாக முதல்–அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 59 பேருக்கும் அரசு கார் தேவையில்லை என்று அவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறினார். அதைத்தொடர்ந்து அதற்கான கடிதத்தை சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரிடம் தி.மு.க. எம்.எல்.ஏ. கோவி செழியன் வழங்கியுள்ளார்.

அரசு கார்கள் வேண்டாம் என்ற அந்தக் கடிதத்தில் தி.மு.க. கூட்டணியில் இருந்து அந்த கட்சி சின்னத்தில் வெற்றி பெற்ற மற்ற கட்சி எம்.எல்.ஏ.க்களான ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, நித்தியானந்தன் ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.



கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.முத்துக்குமரன் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2026 முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்ற போட்டிகளை தொடங்கி வைத்து வாழ்த்து தெரிவித்தார்.



# விநாயகர் சதுர்த்தி ராசி பலன்கள்!



விநாயக சதுர்த்தி 2026 செப்டம்பர் 14, திங்கட்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது. இது பாத்ரபத சுக்ல சதுர்த்தி திதியில் அனுசரிக்கப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை பொதுவான ராசி பலன்கள். தனிப்பட்ட ஜாதக அமைப்பைப் பொறுத்து பலன்கள் மாறுபடலாம்.

**மேஷம்**

முன்னேற்றம் கிடைக்கும் நாள்! நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிகள் முடிவுக்கு வரும். தொழில் மற்றும் வேலை தொடர்பாக புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். பணவரவில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விநாயகரை வழிபட்டு புதிய முயற்சிகளைத் தொடங்கலாம்.

**ரிஷபம்**

தடைகள் விலகும்! எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழிலில் புதிய தொடர்புகள் உருவாகும். பணத்தைச் சேமிப்பதில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும்.

**மிதுனம்**

அதிர்ஷ்டம் கைகொடுக்கும்! அறிவாற்றல் மற்றும் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். வேலைக்காக முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான தகவல் வரலாம். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

**கடகம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி! வீட்டில் சுப நிகழ்ச்சிகள் தொடர்பான பேச்சுகள் நடைபெறும். தொழிலில் புதிய மாற்றங்களை மேற்கொள்ளும் எண்ணம் உருவாகும். செலவுகள் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்**

புதிய வாய்ப்புகள் தேடி வரும்! பணியில் பொறுப்புகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். பணவரவு சீராக இருக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கன்னி**

வெற்றி மற்றும் பாராட்டு கிடைக்கும்! நீண்ட நாட்களாக முயற்சி செய்த காரியத்தில் நல்ல முடிவு கிடைக்கலாம். அலுவலகத்தில் உங்கள் திறமை பாராட்டப்படும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் நிம்மதி நிலவும்.

**துலாம்**

பொருளாதாரத்தில் முன்னேற்றம்! வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும். தொழில் மற்றும் வியாபாரத்தில் சாதகமான சூழல் காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் நிறைவேறலாம்.

**விருச்சிகம்**

முயற்சிக்கு பலன் கிடைக்கும்! பணியில் இருந்த அழுத்தங்கள் குறையும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரலாம். தொழில் தொடர்பான முக்கிய முடிவுகளை நிதானமாக எடுக்க வேண்டும். குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவது மனநிம்மதியைத் தரும்.

**தனுசு**

அதிர்ஷ்டத்தின் ஆதரவு கிடைக்கும்! புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்க வாய்ப்பு உள்ளது. வேலை தேடுபவர்களுக்கு நல்ல தகவல் வரலாம். தொழிலில் வளர்ச்சி ஏற்படும். தொலைதூரப் பயணம் அல்லது புதிய தொடர்புகள் மூலம் நன்மை கிடைக்கலாம்.

**மகரம்**

தடைகள் நீங்கி முன்னேற்றம்! நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வாய்ப்பு உருவாகும். பணியில் பதவி அல்லது பொறுப்பு தொடர்பான நல்ல மாற்றம் ஏற்படலாம். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**கும்பம்**

புதிய தொடக்கங்களுக்கு ஏற்ற காலம்! தொழில் மற்றும் வேலை தொடர்பாக புதிய திட்டங்களை செயல்படுத்தலாம். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு சாதகமான நாள்.

**மீனம்**

மனநிறைவும் நம்பிக்கையும் அதிகரிக்கும்! எதிர்பார்த்த காரியங்கள் மெதுவாக நிறைவேறும். பணியில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். குடும்பத்தினருடன் ஒற்றுமை அதிகரிக்கும். ஆன்மிக ஈடுபாடு மன அமைதியைத் தரும்.

**விநாயகர் வழிபாடு**

விநாயக சதுர்த்தி நாளில் "ஓம் கம் கணபதயே நமஹ" என்ற மந்திரத்தை பக்தியுடன் ஜபித்து, விநாயகருக்கு அருகம்புல் மற்றும் கொழுக்கட்டை/மோதகம் படைத்து வழிபடுவது பாரம்பரியமாக சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

**குறிப்பு:** இவை பொதுவான ராசி பலன்கள் மட்டுமே; தனிப்பட்ட ஜாதகத்தின் கிரக நிலைகளைப் பொறுத்து பலன்கள் மாறுபடலாம்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்




# குழந்தைக்கு பால் கொடுத்த பிறகு ஏப்பம் விட வைக்க வேண்டுமா?



பிறந்த குழந்தைகள் பால் குடிக்கும்போது காற்றையும் விழுங்குவதால், வயிற்றில் காற்று சிக்கி அசௌகரியம் ஏற்படலாம். எனவே, பால் கொடுத்த பிறகு குழந்தையை தோளில் சாய்த்து, தலை மற்றும் கழுத்துக்கு ஆதரவு அளித்து முதுகை மெதுவாகத் தடவி ஏப்பம் வரச் செய்யலாம்.

ஒவ்வொரு முறையும் ஏப்பம் அவசியமில்லை. சில குழந்தைகளுக்கு இடையிலும், சிலருக்கு பால் குடித்த பிறகும் ஏப்பம் தேவைப்படலாம். ஏப்பம் வரவில்லை என்றாலும் குழந்தை சௌகரியமாக இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தை பால் குடித்த பிறகு அழுவதற்கு காற்று மட்டுமின்றி பசி, தூக்கம், ஈரமான டயப்பர் உள்ளிட்ட பல காரணங்கள் இருக்கலாம். முதுகில் பலமாகத் தட்டுவது, குழந்தையை குலுக்குவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். பால் குடித்த பிறகு தூங்க வைக்கும் போது குழந்தையை முதுகில், உறுதியான சமமான படுக்கையில் மட்டுமே படுக்க வைக்க வேண்டும். அடிக்கடி வாந்தி, பால் குடிக்க மறுத்தல், எடை அதிக ரிக்காமை, தொடர்ந்து அழுதல் அல்லது சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் குழந்தைகள் நல மருத்துவரை அணுகுவது அவசியம்.



## சினிமா துளிகள்..!

# சூர்யா 47: வெளியானது புதிய அப்டேட்!



நடிகர் சூர்யாவின் 47–வது திரைப்படத்தின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்திற்கு 'சீன்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சூர்யா தனது புதிய தயாரிப்பு நிறுவனமான ழகரம் ஸ்டூடியோஸ் மூலம் இப்படத்தைத் தயாரித்து வருகிறார். கேரளம் மற்றும் சென்னையில் நடைபெற்ற படப்பிடிப்பு அண்மையில் முழுமையாக நிறைவடைந்தது. சூர்யாவின் பிறந்த நாளை முன்னிட்டு இப்படத்தின் சிறப்பு போஸ்டரும் வெளியிடப்பட்டது. தொடர்ந்து, படத்தின் பெயர் மற்றும் வெளியீட்டுத் தேதி குறித்த தகவல்கள் டீசர் மூலம் வெளியானது. அதன்படி, 'சீன்' திரைப்படம் நவம்பர் 6–ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரே ஆண்டில் சூர்யாவின் 3–வது திரைப்படமாக இது வெளியாக இருப்பதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

## மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்- பெரியகுளம், தேனி மாவட்டம்.

திரு. செல்லத்துரை,
த/பெ மாயாண்டித்தேவர்,
113/27, விஜபி நகர்,
ரித்தீஷ் மருத்துவமனை அருகில்,
ரங்கசமுத்திரம் அஞ்சல்,
சத்தியமங்கலம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

...மனுதாரர்

மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
பெரியகுளம், தேனி மாவட்டம்.

எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் தாயார் காசம்மாள் க/பெ மாயாண்டித்தேவர் என்பவர் கடந்த 17.02.2017–ம் தேதி தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், குன்னூர் அஞ்சல், சண்முகசுந்தரபுரம் கிராமம், திருமலாபுரம் என்ற முகவரியில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை அரசு உரிய பிறப்பு/இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு தாக்கல் செய்து அம்மனுவும் ந.க.எண்: 5095/2026/அ7 என்ற எண்ணாகி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் சமூகம் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் முன்பாக நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஷை மனுவில் பேரில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் சகலருக்கும் தெரிவிக்கலாயிற்று.

திரு.K.**முருகன்** B.Com.B.L
வழக்கறிஞர்,
ஆண்டிபட்டி.

# தமிழ்நாடு முதல்... 9 மாநிலங்களில் ரூ.20,800 கோடி ரயில் திட்டங்களுக்கு சிசிஇஏ ஒப்புதல்!.






புதுடெல்லி, செப். 10–

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் பொருளாதார விவகாரக் குழு (CCEA), ஒன்பது மாநிலங்களில் ரயில்வே கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்காக ரூ.20,800 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான எட்டு புதிய ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. நெரிசலைக் குறைத்தல், பிணைய இணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் வலையமைப்புத் திறனை அதிகரிப்பது ஆகியவை இதன் முக்கிய நோக்கங்களாகும்.

இந்த ஒப்புதல்களின் கீழ், ரூ.10,783 கோடி மதிப்பில் மூன்று பல வழித்தட திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன் மூலம் மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் சுமார் 656 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில் பாதைகள் இணைக்கப்படும். கரக்பூர் ஜார்சுகுடா இடையே நான்காவது பாதை, கட்னி பெண்ட்ரா சாலை இடையே நான்காவது பாதை மற்றும் பிலாஸ்பூர் பெந்த்ரா சாலை இடையே மூன்றாவது பாதை அமைத்தல் ஆகியவை இதில் அடங்கும். இந்தத் திட்டங்கள் மூலம் 14 மாவட்டங்கள் பயனடைவதுடன், சுமார் 56 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 4,790 கிராமங்களுக்கு ரயில் இணைப்பு மேம்படும். மேலும், நிலக்கரி, சிமெண்ட், இரும்பு மற்றும் எஃகு போன்ற முக்கியப் பொருட்களின் போக்குவரத்து எளிமையாக்கப்படும்.

இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 27 மில்லியன் டன் கூடுதல் சரக்கு போக்குவரத்து உருவாக்கப்படுவதுடன், ரயில்களின் இயக்கத்திறன் மற்றும் நம்பகத்தன்மை அதிகரிக்கும் என அரசு தெரிவித்துள்ளது. மேலும், இதனால் தளவாடச் செலவுகள் குறைந்து, சுற்றியுள்ள பகுதிகளில் எண்ணெய் இறக்குமதி சுமார் 12 கோடி லிட்டர் வரை மிச்சப்படும். அத்துடன், கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு சுமார் 62 கோடி கிலோ வரை குறைக்கப்படும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் சுமார் ரூ.10,021 கோடி மதிப்பிலான மேலும் ஐந்து ரயில்வே திட்டங்களுக்கும் பொருளாதார விவகாரக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அரக்கோணம் ரேணிகுண்டா இடையே 3 மற்றும் 4–வது பாதைகள், ஒயிட்ஃபீல்டு பங்காரப்பேட்டை இடையே 3 மற்றும் 4–வது பாதைகள், ஒசூர் ஓமலூர் மற்றும் சேலம் கரூர் திண்டுக்கல் பிரிவுகளில் இரட்டை ரயில் பாதை பணிகள், மற்றும் செகந்திராபாத் காஜிபேட் பிரிவில் பல்தடப் பணிகள் ஆகியவை இதில் அடங்கும். இந்த 5 திட்டங்கள் மூலம் 17 மாவட்டங்கள் பயன்பெறுவதுடன், 540 கி.மீ புதிய இரயில் பாதை சேர்க்கப்பட்டு, 52 லட்சம் மக்கள் வசிக்கும் 2,121 கிராமங்களின் இணைப்பு மேம்படும்.

இந்த உள்கட்டமைப்புத் திட்டங்கள் அனைத்தும், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு திட்டமிடல் மூலம் பன்முனை இணைப்பை மேம்படுத்தும் 'பிஎம் கதி சக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தின்' கீழ் திட்டமிடப்பட்டுள்ளன.

# 'மிசா' கொடுமைகள் குறித்து மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியீடு!



சென்னை, செப். 10–

எமர்ஜென்சி காலத்தில் மிசாவில், தான் கைது செய்யப்பட்டதை நினைவு கூர்ந்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டு உள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில், வீட்ல என்னை meet பண்ணப்ப சொன்னதை மறந்துட்டீங்களா தம்பி விஜய்? என்று பதிவிட்டு வீடியோ வெளியிட்டு உள்ளார். அதில்,

* மிசா காலத்தில் கைது செய்யப்பட்ட போது சிறையில் எங்களுக்கு பல கொடுமைகள் நடந்தது.
* காவலர்கள் தாக்கியதில் எனது அருமை அண்ணன் சிட்டிபாபு இறந்தார். அவர்கள் தாக்கியதில் எனது தாடை எலும்பு உடைந்தது.
* எதிர்த்து போராடுவதும் அதன் விளைவுகளை சந்திப்பதும் எங்களுக்கு புதியது அல்ல.
* யார் என்னை கொச்சைப்படுத்தினாலும் வரலாற்றை மாற்ற முடியாது.
* உங்களுக்கு சந்தேகம் இருந்தால் சட்டசபையில் உள்ள நூலகத்திற்கு சென்று எனது போராட்ட வரலாற்றை படித்து பாருங்கள்.
* சர்காரியாக கமிஷன் பற்றியும் தலைவர் கலைஞர் பற்றியும் தவறான தகவலை முதலமைச்சர் விஜய் கூறி உள்ளார்.
* அரசியலுக்காக காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் சொன்ன பொய்யான குற்றச்சாட்டையும் முதலமைச்சர் விஜயும் கூறி உள்ளார்.
* அமலாக்கத்துறை குற்றம்சாட்டிய 95% வழக்குகளில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் குற்றம்சாட்டப்பட்டோர் விடுவிக்கப்பட்டனர்.
* பெரும்பாலும் அரசியல் பழிவாங்கலுக்காகவே அமலாக்கத்துறை ஏவப்படுவது இங்கு உள்ள எல்லாருக்குமே தெரியும்.
* தேர்தல் பிரசாரத்தின்போது கடுமையாக விமர்சித்ததற்கு சாரி என்று என்னிடம் கூறினீர்களே?
* பரவாயில்லை தம்பி. நீங்க இப்போ மாநிலத்தின் முதலமைச்சர். யாரைப்பற்றியும் பேசும்போது கண்ணியத்தோடு பேசுங்கள் என்று சொன்னேன். அதையெல்லாம் மறந்துட்டீங்களே.
* தமிழ்நாடு சட்டசபைக்கென ஒரு மாண்பும் மரியாதையும் இருக்கிறது.
* முதலமைச்சர் விஜய் தமிழ்நாடு சட்டசபையில் தேவையில்லாத சர்ச்சைகளை பேச வேண்டாம்.
* தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு படுகுழியில் இருக்கிறது.
* வீட்ல என்னை meet பண்ணப்ப சொன்னதை மறந்துட்டீங்களா தம்பி விஜய்?
* தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை பற்றி வாய் திறக்காமல் இருப்பது ஏன்?
* விதவிதமான ரீல்ஸ் போட்டு ஒரு தலைமுறையையே வீணாக்கி வருகிறீர்கள்.
* வாக்களிக்கவில்லை என்பதற்காக மக்களை திமுகவினர் கைவிட்டு விடக்கூடாது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# மும்மொழி கொள்கையில் 6-ம் வகுப்பு மாணவர்களுக்கு விலக்கு!



புதுடெல்லி, செப். 10–

9–ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூலை 1–ந்தேதி முதல் 3 மொழிகள் கட்டாயம் எனவும் அதில் 2 மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும் சி.பி.எஸ்.இ. அறிவித்தது. இதை எதிர்த்து பல்வேறு தரப்பினர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜோய் மால்யா பாக்சி, மோகனா அமர்வு விசாரித்து வருகிறது. 3 மொழி கொள்கையை அமல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இதனால் மாணவர்கள் எத்தகைய அழுத்தத்துக்கும் ஆளாகக்கூடாது என்றும் வலியுறுத்தினர். பின்னர் இந்த கொள்கை 6–ம் வகுப்பிலேயே அறிமுகப்படுத்தினால், இந்த ஆண்டு விட்டுவிட்டு அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யுமாறும் அறிவுறுத்தி இருந்தனர். இந்த நிலையில் தலைமை நீதிபதி அமர்வில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மீண்டும் இந்த கருத்தை நீதிபதிகள் வலியுறுத்தினர். அதன்படி நீதிபதிகள் கூறுகையில், 'இந்த ஆண்டு 6–ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு விலக்கு அளிக்க முடியுமா?' என்று பரிசீலிக்குமாறு சி.பி.எஸ்.இ. தரப்பை நீதிபதிகள் கேட்டுக்கொண்டனர். அதற்கு சி.பி.எஸ்.இ. சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆலோசித்து கூறுவதாக தெரிவித்தார். எனினும் இந்த விவகாரத்தில் எந்த உறுதிமொழியையும் அவர் அளிக்கவில்லை.நாங்கள் அனைவரும் அமர்ந்து ஆலோசித்து கூறுகிறோம்' என்று மட்டும் கூறினார். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், வழக்கின் அடுத்த விசாரணையை வருகிற 17–ந்தேதிக்கு ஒத்திவைத்தனர். அதேநேரம் வழக்கு தொடர்ந்து ஒத்தி வைக்க ப்படுவதற்கு மனுதாரர்கள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் தேர்வு எழுத வேண்டியிருப்பதாலும், அது அவர்களது பெற்றோரிடையே கவலையை ஏற்படுத்துவதாலும், மேலும் ஒத்திவைப்புகளால் இந்த விஷயத்தை தாமதப்படுத்தக்கூடாது என்று மனுதாரர்களின் வக்கீல் ஒருவர் கேட்டுக்கொண்டார். எனினும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பட்டி வராததால், விசாரணையை ஒத்திவைக்க சொலிசிட்டர் ஜெனரல் கேட்டுக்கொண்டார். எனவே குறைந்த நாட்களுக்கு மட்டுமே தள்ளி வைப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

# செப். 16-ல் காலாண்டுத் தேர்வு!



சென்னை, செப். 10–

1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான காலாண்டுத் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வி இயக்ககம் (செப். 9) வெளியிட்டுள்ளது

தமிழகத்தில் அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகளுக்கான காலாண்டுத் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ளது.

இதில், 1 மற்றும் 2ஆம் வகுப்புகளுக்கு செப்டம்பர் 17 ஆம் தேதி தொடங்கி செப்டம்பர் 24 ஆம் தேதி வரை காலாண்டு தேர்வு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 முதல் 10 ஆம் வகுப்பு வரை செப்டம்பர் 16 ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் 24 வரை காலாண்டு தேர்வு நடைபெறும் என்றும்

11, 12 ஆம் வகுப்புகளுக்கு செப்டம்பர் 16 ஆம் தேதி காலாண்டு தேர்வுகள் தொடங்கி செப்டம்பர் 25 ஆம் தேதி வரை நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசு 2,536 காலிப்பணியிடங்கள்! –10/+2



நிறுவனம்: Staff Selection Commission (SSC) பணியாளர் தேர்வாணையம்
அறிவிப்பு எண்: HQ–C1102/5/2026–C–1
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு வேலை
பணியின் தன்மை: நிரந்தர பணி
மொத்த காலிப்பணியிடங்கள்: 2,536
தேர்வு: Combined Higher Secondary (10+2) Level Examination, 2026
பணியிடங்கள்: 2,536
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 07.09.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 07.10.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssc.gov.in/

**முக்கிய குறிப்பு**

Staff Selection Commission சார்பில் Combined Higher Secondary (10+2) Level Examination, 2026 தேர்வுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 2,536 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இந்த வேலைவாய்ப்பு மத்திய அரசு பணியாகவும், நிரந்தர அடிப்படையிலான பணியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பணியிடங்கள் இந்தியா முழுவதும் உள்ளன.

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் 07.09.2026 முதல் 07.10.2026 வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் வேலைவாய்ப்பு தொடர்பான முழுமையான விவரங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்கு **Staff Selection Commission–ன் அதிகாரப்பூர்வ இணையதளமான https://ssc.gov.in/**–ஐ பார்வையிடலாம்.

# தே.மு.தி.க.: 16-ல் மாவட்ட செயலர்கள் ஆலோசனை!



சென்னை, செப். 10–

தே.மு.தி.க., கட்சி தலைமை வெளியிட்ட அறிக்கை: தே.மு.தி.க., பொதுச் செயலர் பிரேமலதா தலைமையில், வரும் 16ம் தேதி காலை, சென்னை கோயம்பேடில் உள்ள தே.மு.தி.க., தலைமை அலுவலகத்தில், மாவட்ட செயலர்கள் ஆலோசனைக் கூட்டம் நடக்கும்.

கட்சியின் 22ம் ஆண்டு தொடக்க நாள் மற்றும் மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் இடைத்தேர்தல் குறித்து, முக்கிய ஆலோசனை நடைபெறும். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசு டாக்டர்களின் ஓய்வு வயது நீட்டிப்பு!

லக்னோ, செப். 10–

உத்தரபிரதேசத்தில் அரசு டாக்டர்களின் ஓய்வுபெறும் வயது 65 ஆக உள்ளது. மக்கள் தொகை அதிகம் கொண்ட அந்த மாநிலத்தில் அரசு ஆஸ்பத்திரிகள், சுகாதார நிலையங்களில் அதிகமான நோயாளிகள் தினமும் வருகை தருவதால் அவர்களை கையாளுவதற்கு போதிய டாக்டர்கள் இல்லை. எனவே அரசு டாக்டர்களின் ஓய்வு வயதை நீட்டிக்க மாநில அரசு முடிவு செய் துள்ளது. அதன்படி 65 வயதில் ஓய்வு பெறும் டாக்டர்களை மறு நியமனம் மூலம் 70 வயது வரை பணியாற்றும் திட்டத்தை அரசு அறிவித்து உள்ளது. இதன் மூலம் அரசு சுகாதார த்துறை மேலும் வலுப்பெறும் என மாநில சுகாதார மந்தி ரியும், துணை முதல்–மந்திரியு மான பிரஜேஷ் பதக் கூறியுள்ளார்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# வங்கக்கடலில் காற்றழுத்த பகுதி!



புது தில்லி, செப். 10–

வடக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய வங்கதேசம் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது என இந்திய வானிலை ஆய்வுமையம் (ஐஎம்டி) தெரிவித்துள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (ஐஎம்டி) தகவலின்படி, வடக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய வங்கதேசம் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் உருவாகியுள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, ஒடிசா, மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் கடலோரப் பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளது. காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் தமிழகத்திற்கு நேரடியாக எந்த பாதிப்பும் இருக்காது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**சிவப்பு எச்சரிக்கை**

ஒடிசாவின் சில மாவட்டங்களுக்கு சிவப்பு மற்றும் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒடிசாவில் வியாழக்கிழமை கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும், சில இடங்களில் மிக அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று 'சிவப்பு எச்சரிக்கை' விடுத்துள்ளது.

அடுத்த இரண்டு நாள்களில் அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், கேரளம் மற்றும் உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் கனமழை பெய்யக்கூடும். தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, இமயமலை அடிவாரப் பகுதிகளை ஒட்டிய மேற்கு வங்கம் மற்றும் சிக்கிம் ஆகிய பகுதிகளில், இந்த மாதம் 15–ஆம் தேதி வரை இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம், கிழக்கு உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் நாளை வரை இதே போன்ற வானிலை நிலவக்கூடும். கடலோர ஆந்திரப் பிரதேசத்தில் இன்று வெப்பமான மற்றும் அதிக ஈரப்பதத்துடன் கூடிய வானிலை நிலவ வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

# ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை உணவகத்தில் என்ன நடந்தது? திடீர் ஆய்வுக்கு காரணம்?



சென்னை, செப். 10–

சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இயங்கி வந்த தனியார் உணவகத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் தலைநகர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் சிகிச்சைக்காக வருகிறார்கள். இங்கு செயல்பட்டு வந்த தனியார் உணவகத்துக்கு நேற்று மதியம் திடீரென வந்த சென்னை மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், உணவகத்தை ஆய்வு செய்து, சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த உணவக உரிமத்தை ரத்து செய்ததோடு, உணவு தயாரிப்பு மற்றும் அங்கு உணவு விற்பனை செய்யத் தடை விதித்து கடையை அடைத்துவிட்டனர்.

ஏற்கனவே, இந்த உணவகம் மீது, சமூக வலைத்தளங்களில் ஏராளமான புகார்கள் குவிந்த வண்ணம் இருந்தது. அதனை முன்னிட்டு அதிகாரிகள் ஆய்வு நடத்தி, உடனடியாக சுகாதாரமான முறையில் உணவைத் தயாரிக்குமாறு நோட்டீஸ் பிறப்பித்திருந்தனர். எனினும், எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஆனால், மூன்று நாள்களுக்கு முன்பு, முதல்வர் புகார் பிரிவுக்கு ஒரு புகார் கடிதம் வந்துள்ளது. அதன் அடிப்படையில், சென்னை மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் உடனடியாக உணவகத்தை ஆய்வு செய்தனர். அப்போது உணவகத்தில் சமையலறை மிகுந்த துர்நாற்றத்துடன், முறையான சுகாதாரம் இன்றி செயல்பட்டு வந்தது கண்டறியப்பட்டது. உணவுப் பொருள்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்ததும், உடைந்த பாத்திரங்களைப் பயன்படுத்தி உணவு தயாரித்ததும், சமையல் அறையின் சுவர், தரை போன்றவை பார்க்கவே முடியாத வகையில் இருந்துள்ளது.

இதையடுத்தே, உணவக உரிமத்தை ரத்து செய்து, உணவகத்தையே மூடிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இந்த உணவகத்தில் சாப்பிடுவோர் பலரும், உணவு தரமற்று இருப்பதாகவும் பல நாள்கள் பாதி வெந்த சோறும், தரமற்ற சாம்பாரும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். நோய் பாதித்து இங்கு வந்தால், இந்த உணவகத்தில் சாப்பிட்டு மேலும் பல நோய்கள் வரலாம் என்று தாங்கள் அஞ்சுவதாகவும் நோயாளிகளின் உறவினர்கள் ஏற்கனவே பல முறை புகார் கூறியிருக்கிறார்களாம்.

இதைத் தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வந்த தேநீர் கடையிலும் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த சர்க்கரை உள்ளிட்டவை ஈ, எறும்புகள் மொய்க்கும் வகையில் இருந்துள்ளது.

சாண்விட்ச் தயாரிக்க வைக்கப்பட்டிருந்த ரொட்டிகள் காலாவதி தேதி குறிப்பிடாமல் இருந்துள்ளது. பழச்சாறு செய்ய வைக்கப்பட்டிருந்த பழங்கள் அழுகிப்போயிருந்தன. உடனடியாக அந்த கடைக்கு அபராதம் விதித்ததோடு, உடனடியாக இவற்றை சரி செய்யவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கொளத்தூர் எம்.எல்.ஏ. மருத்துவமனையில்?



சென்னை, செப். 10–

கொளத்தூர் தொகுதி தவெக எம்.எல்.ஏ வி.எஸ். பாபு உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்த வி.எஸ். பாபுக்கு இன்று அதிகாலை உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, விஎஸ்பாபு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். மூச்சுதிணறல் காரணமாக தீவிர சிகிச்சை பிரிவில் வி.எஸ். பாபு அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமைந்தகரையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள விஎஸ் பாபு உடல் நிலையை மருத்துவர்கள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். விஎஸ் பாபு விரைவில் உடல் நலம் பெற்று வீடு திரும்ப வேண்டும் என்று அவரது ஆதரவாளர்களும் தவெகவினரும் விருப்பம் தெரிவித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள்.

# விசிக மாநாட்டில் நெரிசல் ஏற்பட்டது சதித்திட்டமா?



சென்னை, செப். 10–

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் கடந்த மாதம் 17–ந் தேதி நடந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநாட்டில் கடும் நெரிசல் ஏற்பட்டது. அப்போது தங்கள் கட்சித் தலைவர் திருமாவளவனை கொல்ல சதி நடந்ததாக வி.சி.க. சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்தநிலையில் சென்னை வேளச்சேரியைச் சேர்ந்த வக்கீல்கள் ராஜேந்திரன், நெப்போலியன் ஆகியோர் உளுந்தூர்பேட்டை சம்பவத்தைச் சுட்டிக்காட்டி திருமாவளவனுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு மற்றும் இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கவும், உளுந்தூர்பேட்டை மாநாட்டில் பாதுகாப்புக் குறைபாடு குறித்து உரிய விசாரணை நடத்தவும் உத்தரவிட வேண்டும் என சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆனந்தராஜா, இளஞ்செழியன் ஆகியோர், இந்த புகார் தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் கள்ளக்குறிச்சி போலீஸ் சூப்பிரண்டு உரிய விசாரணை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை அடுத்த மாதம் (அக்டோபர்) 5–ந் தேதிக்குள் தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.



திருச்சுழியில் நடைபெற்ற காங்கிரஸ் இயக்க மறுசீரமைப்பு திட்டம்–2ன் விளக்க கூட்டத்தில் விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் மன்னை மதியழகன் பேசினார். மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கிருஷ்ணமூர்த்தி,பொதுக்குழு உறுப்பினர்கள் உழக்குடி செல்வம், சங்கர்போஸ், துரைப்பாண்டியன் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிவகுருநாதன், மாவட்ட செய்தி தொடர்பாளர் மீனாட்சி சுந்தரம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தீபாவளிக்கு மறுநாள் ரயில் டிக்கெட் முன்பதிவு: கடும் அதிருப்தியில் பயணிகள்!



சென்னை, செப். 10–

தீபாவளி பண்டிகையையொட்டி சொந்த ஊர் சென்று திரும்பிவர ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கிய ஓரிரு நிமிடங்களில் முடிந்தது. ரயில் டிக்கெட் முன்பதிவு வழக்கமாக 60 நாள்களுக்கு முன்பு தொடங்கும். அந்த வகையில் தீபாவளிக்கு ரயில்களில் பயணிப்பதற்கான முன்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் வரும் நவ. 8–ஆம் தேதி (ஞாயிறு) தீபாவளி திருநாள் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, தீபாவளிக்கு சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்வோர் அதிக அளவில் ரயில்களில் முன்பதிவு செய்து வருகின்றனர். சொந்த ஊர் செல்வதற்கான டிக்கெட் முன்பதிவு முடிந்த நிலையில், சொந்த ஊரில் இருந்து நகரங்களுக்குத் திரும்புவதற்கான ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கியுள்ளது. தீபாவளி மறுநாள் நவ. 9 ஆம் தேதி (திங்கள்கிழமை) பயணிப்பதற்கு ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று (செப். 10) காலை 8 மணிக்குத் தொடங்கியது. தொடங்கிய சில நிமிடங்களில் டிக்கெட்டுகள் முடிந்தன. தீபாவளி மறுநாள் என்பதால் டிக்கெட் முன்பதிவில் கடும் போட்டி நிலவியது.

பலருக்கும் ஐஆர்சிடிசி கணக்கு லாக் – இன் கணக்கே உள்நுழைய முடியாத நிலை இருந்ததாகக் கூறுகின்றனர். சுமார் 5 நிமிடங்களுக்கு பிறகே கணக்கில் உள்நுழைய முடிந்தது. ஆனால், அப்போது டிக்கெட்டுகள் எதுவும் இல்லாமல் 'REGRET' நிலையில் இருந்தது. இதனால் பயணிகள் கடும் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்தனர். சிலருக்கு உள்நுழைந்தாலும் டிக்கெட் கட்டணம் செலுத்தும் பணபரிமாற்றத்தில் பிரச்னை ஏற்பட்டு டிக்கெட் முன்பதிவு செய்ய முடியாமல் போனது.

இதேபோல ஏசி டிக்கெட்டுகளும் சில நிமிடங்களிலேயே விற்றுத் தீர்ந்ததால் பயணிகள் கடும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மற்ற பகுதிகளுக்கு குறிப்பாக தென் மாவட்டங்களுக்கு பயணிப்பவர்கள் எண்ணிக்கை, முன்பதிவு டிக்கெட்டுகளின் எண்ணிக்கையைவிட பல மடங்கு அதிகமாக இருப்பதால் ரயில் டிக்கெட் கிடைக்காமல் பலரும் அவதிப்படுகின்றனர்.

நவ. 10, செவ்வாய்க்கிழமை பயணிப்பதற்கு நாளை (செப். 11, வெள்ளி) காலை 8 மணிக்கு ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் பிரசாதங்கள் விலை உயர்வு!



மதுரை, செப். 10–

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். அவர்களுக்காக கோவில் நிர்வாகத்தின் கீழ் நேரடியாக தயார் செய்து சர்க்கரை பொங்கல் (100 கிராம்), புளியோதரை (100 கிராம்). ஒரு வடை (50 கிராம்), ஒரு அப்பம் (50 கிராம்), ஒரு லட்டு (50 கிராம்) ஒரு முறுக்கு (50 கிராம்) ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக கோவிலுக்குள் 3 இடங்களில் பிரசாதம் விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பிரசாதங்கள் கடந்த பல ஆண்டுகளாக தலா ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இந்த நிலையில் திடீரென்று இன்று முதல் பிரசாதங்கள் விலை உயர்த்தப்படுகிறது. அதாவது வழக்கம் போல 50 கிராம் எடை கொண்ட ஒரு லட்டு ரூ.10–ல் இருந்து ரூ.20 ஆகவும், 50 கிராம் முறுக்கு ரூ.10–ல் இருந்து ரூ.25 ஆகவும் உயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 50 கிராம் எடை கொண்ட மெதுவடை முதல் முறையாக மிளகு வடையாக தயாரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.10–ல் இருந்து ரூ.20 ஆகி விலை உயருகிறது.

கடந்த காலங்களில் 100 கிராம் எடைகொண்ட புளியோதரையை 150 கிராமாக உயர்த்தி ரூ.10–ல் இருந்து ரூ.20 ஆகவும், 100 கிராம் பொங்கலை 150 கிராமாக உயர்த்தி ரூ.10–ல் இருந்து ரூ.20 ஆக உயர்த்தப்படுகிறது. இதுகுறித்து கோவில் துணை கமிஷனர் செல்வி கூறும்போது, தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களில் பிரசாதங்கள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. பிரசாதங்களில் எள், ஓமம் சேர்க்கப்பட்டு தரமாகவும், ருசியாகவும், எடையின் அளவு சரியாகவும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் என்றார். இதுகுறித்து பக்தர்கள் கூறும்போது, கோவிலுக்கு வந்து சென்றதற்கு அடையாளமா கவும், கோவிலில் செய்யக்கூடிய பிரசாதம் ருசியாகவும், தரமாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையால்தான் வீட்டில் உள்ள குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு கோவிலில் இருந்து பிரசாதங்கள் வாங்குகிறோம். அதுவும் மிக குறைந்த விலை என்பதால் கூடுதலாக பிரசாதங்கள் வாங்கி செல்கிறோம். ஆனால் பிரசாதத்திற்கு விலை உயர்த்தப்படுகிறது என்பதை கேட்கும் போது வருத்தத்தை ஏற்படுத்துகிறது என்றனர்.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கலைப்பிரிவு சார்பில் புதிய அலுவலக திறப்பு விழா!



திருப்பூர், செப். 10–

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் குன்னத்தூர் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கலைப்பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் தேசியம் பி.குமார் விழாவிற்கு தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் அத்திக்காடு என்.ஏ.சுப்பிரமணி வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கொங்கு மண்டல எஸ்.எஸ்.ஏ. ஒருங்கிணைப்பாளர் தனிகாசலம், கட்சிக் கொடியை ஏற்றி வைத்து,புதிய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி, திருப்பூர் மாநகர் மாவட்ட மேலிடப் பொறுப்பாளர் துரைராஜ், முன்னாள் தலைவர் கிருஷ்ணன், மாநில பொதுச் செயலாளர் கே.பி.ஜி. செந்தில்குமார் உள்ளிட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கலைப்பிரிவு நிர்வாகிகள், காங்கிரஸ் தொண்டர்கள் பலர் பங்கேற்றனர்.புதிய அலுவலகம் திறக்கப்பட்டதையொட்டி பொதுமக்கள் மற்றும் கட்சித் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.



தேனியில்தி.மு.க.வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்ட அவை தலைவர் செல்லப்பாண்டி தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை கழக பிரதிநிதி சட்டதிட்ட குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகர், தலைமை கழக பிரதிநிதி மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல் மூக்கையா, மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், திருக்கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் கள் முருகேசன் தெய்வேந்திரன் ராஜாரமேஷ் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பிலிப்பைன்ஸ்: பயணிகள் படகில் தீவிபத்து - 5 பேர் பலி, 80-க்கும் மேற்பட்டோர் மாயம்!



ஜகார்த்தா, செப். 10–

பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் இருந்து நேற்றைய தினம் 'எம்வி ஜூன் ஆஸ்டர்' (MV June Aster) என்ற என்ற பயணிகள் படகு புறப்பட்டு சென்றது.

அந்த படகு மேற்கு பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, கோரோன் (Coron) என்ற பகுதி அருகே எதிர்பாராத விதமாக படகில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. அந்த படகில் 117 பயணிகள் மற்றும் 17 பணியாளர்கள் என மொத்தம் 134 பேர் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்து கடலோர காவல் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதுவரை 42 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அதே சமயம், படகில் பயணித்த சுமார் 80–க்கும் மேற்பட்டவர்கள் மாயமாகி இருப்பதாகவும், அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



தேனி மாவட்டம் பாலகிருஷ்ணாபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 92 பயனாளிகளுக்கு ரூ.2.94 கோடி மதிப்பீட்டில் அரசு நலதிட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் வழங்கினார். உடன் பெரியகுளம் சார்ஆட்சியர்தவ்லேந்து உள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020